## தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| ID.No. | : | 251/2019 | சாட்சியம் | : | MW2 |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.மோகன் | | | |
| Date | : | 07.02.2026 | | | |
| Time | : | 10.42 a.m to 12.38 p.m | | | |

**நி.த.சா.2.திரு.மோகன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**நி.சா.ஆ.6** ஆவணம் எங்கள் நிறுவனத்திற்கு உரியது என காட்ட நிறுவன அதிகாரிகளின் கையொப்பமோ முத்திரையோ காணப்படுகிறதா என்றால் இல்லை. மூன்று பக்கங்களில் GKN முத்திரை காணப்படவில்லை ஒரு பக்கத்தில் மட்டும் அதன் முத்திரை காணப்படுகிறது. அந்த ஆவணத்தில் எங்கள் கம்பெனி விலாசம் உள்ளதா என்றால் இல்லை. அந்த ஆவணத்தில் எங்கள் கம்பெனி ஊழியர்களின் புகைப்படமோ இந்தியாவை சேர்ந்தவர்களின் புகைப்படமாக உள்ளதா என்றால் இல்லை. அந்த ஆவணம் எங்கள் நிறுவனத்திற்கு உரியது இல்லை என்றாலும் வெளிநாட்டு நிறுவனத்திற்கு உரியது என்றாலும் சரியல்ல. **நி.சா.ஆ.7** ஆவணத்தில்

எங்கள் சென்னை அலுவலகத்தின் முத்திரை முகவரி இல்லை என்றால் ஆமாம். அந்த ஆவணத்தின் பக்கம் ஒன்றில் இருக்கும் புகைப்படம் எங்கள் சென்னை நிறுவனத்திற்கு உரியதா என்றால் ஆமாம். அதில் சென்னை நிறுவனம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை அதன் புகைப்படம் மட்டும் தான் உள்ளது. **நி.சா.ஆ.7** ஆவணம் எங்கள் நிறுவனத்திற்கு சம்பந்தப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் மூன்று நபர்களின் புகைப்படம் காணப்படுகிறது அவர்கள் யார் என்றால் அவர்களின் பெயர் தெரியாது. அவர்கள் என்ன வேலை பார்க்கிறார்கள் எங்கு வேலை பார்க்கிறார்கள் என்பதும் தெரியாது. அவர்கள் யார் என தெரியாத காரணத்தினால் அவர்கள் எங்கு வேலை பார்க்கிறார்கள் என்ற விவரமும் என்னால் சொல்ல இயலவில்லை. மேலும் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களா இல்லையா என்பது சம்பந்தமாகவும் சொல்ல இயலவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் Skill Matrix இல்லை என்றால் ஆமாம். **நி.சா.ஆ.8** நிறுவனம் சார்பாக ஊழியர்கள் போட்டியில் கலந்து கொண்டதற்கான ஆவணமாகும். **நி.சா.ஆ.8** QCFI Event 2023-ல் இடது ஓரம் உள்ளது யாருக்கு உரிய

புகைப்படம் என்றால் மாரியப்பன் என்பவருக்கு உரியது ஆகும். அவருக்கு அருகில் உள்ள புகைப்படத்தில் உள்ள நபர் யார் என தெரியாது. **நி.சா.ஆ.8** டீம் லீடர் ஒன்று என கண்டுள்ளதில் உள்ள பொன்முருகன் என்பவர் டிப்ளமோ இன்ஜினியர் ட்ரைனியாக எங்கள் கம்பெனியில் வேலை பார்த்தாரா என்றால் தெரியாது. QCFI Chennai Chapter 26th Convention என கண்டுள்ள பக்கத்தில் நடுவில் இருக்கும் புகைப்படத்தில் Team-2 என குறிப்பிடப்பட்டுள்ளதில் வலதிலிருந்து இடது பக்கமாக நான்காவதாக நிற்கும் நபர் யார் என்றால் தெரியாது. அந்த போட்டியில் நான் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. Team-5 என குறிப்பிடப்பட்டுள்ளதில் என் புகைப்படம் உள்ளது என்றால் ஆமாம். நான் போட்டியில் கலந்து கொண்டேன் என்றாலும் போட்டியில் கலந்து கொண்ட அனைத்து நபர்களின் விவரம் எனக்கு தெரியும் என்றால் இல்லை. அந்த ஆவணத்தில் போட்டியில் கலந்து கொண்ட நபர்களின் பட்டியல் உள்ளது என்றால் ஆமாம். அந்த பட்டியயில் NU என குறிப்பிடப்படுள்ளதன் விரிவாக்கம் என்ன என்றால் Non Union. U என்பதின் விரிவாக்கம் Unionist. பட்டியலில் வரிசை எண். 27,28 ல் உள்ளவர்கள் இந்த வழக்க சம்மந்தப்பட்ட தொழிலாளி என்றால்

அசோக்குமார் மட்டும் தான் சம்மந்தப்பட்டவர். பன்னீர்செல்வம் இல்லை. அசோக்குமார் டீம் லீடர் ஆவார். பன்னீர் செல்வம் என்ன வேலை செய்தார் என தெரியாது. அந்த ஆவணத்தை யார் தயாரித்தார்கள் என்றால் நிறுவனத்தின் கோஆர்டினேட்டர் தான் தயாரித்தார். பொன்முருகன், காளீஸ்வரன், வசீகரன் ஆகியோரின் பெயர் நீக்கப்பட்டதற்கு காரணம் உள்ளதா என்றால் தெரியாது. **நி.சா.ஆ.8** வழக்கிற்கு சம்பந்தமில்லாதது என்றால் சரியல்ல. அந்த ஆவணம் மூன்றாவது நபர் நடத்திய போட்டி சம்பந்தப்பட்டது என்றாலும் எங்கள் நிறுவனத்தின் உற்பத்தி சம்பந்தப்பட்டது இல்லை என்றாலும் ஆமாம். **நி.சா.ஆ.9 முதல் 94** வரை உள்ள ஆவணங்கள் சமீபத்திய ஆவணம் என்றாலும் வழக்கு காலகட்டத்திற்கு உரியது இல்லை என்றாலும் சரியல்ல. **நி.சா.ஆ.9 முதல் 94** வரை உள்ள ஆவணங்கள் எந்த வருடத்தில் தொடங்கி எந்த வருடத்தில் முடிவதற்கான ஆவணங்கள் என்றால் 2024 முதல் 2025 வரைக்கு உரியது ஆகும். **நி.சா.ஆ.11** ஆவணத்தில் நிறுவனத்தின் எந்த அதிகாரி கையொப்பம் இடுவார் என்றால் சீனியர் எக்ஸிக்யூட்டிவில் இருந்து மேனேஜர் வரை உள்ள அதிகாரிகள் கையொப்பம் இடுவார்கள். மேற்படி அதிகாரிகளின் கையொப்பம் அந்த

ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. Press Process Parameter Check Sheet Format எத்தனை ஆண்டுகளாக பின்பற்றப்படுகிறது என்றால் 2012-ல் இருந்து உள்ளது. 2019-ல் அது மறு வடிவமைக்கப்பட்டுள்ளது அதனையும் தாக்கல் செய்துள்ளேன். **நி.சா.ஆ.11,15** ஒரே மாதிரியான படிவமா என்றால் ஆமாம். ஆனால் அந்த படிவங்களில் வித்தியாசம் காணப்படுகிறது என்றால் ஆமாம். இரு வேறு மெஷின்களில் அவை எடுக்கப்பட்ட காரணத்தினால் அந்த வித்தியாசம் உள்ளது. ஒவ்வொரு துறைக்கும் அந்த படிவத்தில் உள்ள விவரங்கள் வித்தியாசப்படும். நி.சா.ஆ.15 ஆவணத்தில் எங்கள் நிறுவனத்தின் மேலாளர், சீனியர் எக்ஸிக்யூட்டிவ் ஆகியோர் கையெழுத்து போடவில்லை என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் டீம் மெம்பர் அல்லது டீம் லீடர் Check செய்ய வேண்டும் என கண்டுள்ளது என்றால் ஆமாம். டீம் மெம்பர் என்பவர் யார் என்றால் ஆவணத்தை பார்க்க வேண்டும். எந்த ஆவணத்தை பார்த்தால் தெரிய வரும் என்றால் ரோல்ஸ் அண்ட் ரெஸ்பான்சிபிலிட்டிஸ் பார்த்தால் தெரியவரும். அந்த ஆவணத்தை நான் பார்க்கவில்லை. யார் யாருக்கு என்னென்ன பொறுப்பு இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். டீம் லீடர் மற்றும் டீம் மெம்பர்

பரிசோதனை செய்த பிறகு ப்ரொடக்ஷன் சூப்பர்வைசர் தான் இறுதியாக OK கொடுக்க வேண்டும் என்றால் ஆமாம். ஒரு Process-யை பரிசோதனை செய்து இறுதி முடிவு எடுப்பதற்கான அதிகாரம் டீம் மெம்பர் மற்றும் டீம் லீடர் ஆகிவருக்கு இல்லை என்றாலும் ப்ரொடக்ஷன் சூப்பர்வைசருக்கு மட்டும்தான் உள்ளது என்றாலும் ஆமாம். வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்றால் குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. டில்லிராஜ், ஆனந்தராஜ், ஈஸ்வரன் ஆகியோருக்கு சம்பந்தப்பட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்றால் தெரியாது. சாட்சியம் அளிப்பதற்கு முன்னர் ஆவணங்களை படித்து பார்த்துவிட்டு வந்தேனா என்றால் படித்து பார்த்தேன் ஆனால் தற்போது ஞாபகம் இல்லை. நான் அனைத்து ஆவணங்களையும் படித்து பார்த்து சாட்சியம் அளிப்பேன் என்ற நம்பிக்கையில் தான் நிர்வாகம் எனக்கு சாட்சியம் அளிக்க அதிகாரம் கொடுத்துள்ளது என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள ஈமெயில்கள் எனக்கு அனுப்பப்பட்டவை இல்லை

என்றால் ஆமாம். இமெயிலில் Manpower சம்பந்தமாக சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் டெக்னிகல் சம்பந்தப்பட்டவை என்றால் ஆமாம். நிர்வாக தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையை படித்துப் பார்க்கவில்லை. சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள டெக்னிக்கல் இன்ஜினியரிங் ட்ரெயினி, ஆபரேட்டிங் இன்ஜினியரிங் ட்ரைனி, ஆகியோர் எந்த Cadre-ல் வருவார்கள் என்றால் நேரடி தொழிலாளர்கள் என்ற நிலையில் வருவார்கள். ஆப்பரேட்டிங் இன்ஜினியர், டீம் லீடர் ஆகியோர் டைரக்ட் லேபர் என்ற Cadre-ல் தான் வருவார்கள். பத்தி எட்டில் கண்டுள்ளவர்கள் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் என்றால் ஆமாம். பத்தி நாலில் கண்டுள்ள விவரங்களுக்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இயந்திர பிரிவில் உள்ள ஆபரேட்டர்களின் பங்கு என்ன என்றால் மிஷினை இயக்குவது ஆகும். மெஷின் பிரிவு Fully Automatic என சொல்வது உண்மை இல்லை என்றால் சரியல்ல. பத்தி ஆறில் கண்டுள்ள விவரங்களுக்கு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் Daily Production report, First Piece passoff தாக்கல் செய்துள்ளேன். டீம் லீடர்களுக்கு Gate Pass,On Duty slip

வழங்குவதற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டதாக சொல்லி உள்ளேன் அவ்வாறு அதிகாரம் கொடுக்கப்பட்டது என காட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்றால் இல்லை. **நி.சா.ஆ.6** ஆவணத்தில் சொல்லியுள்ள வேலை எதையும் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் செய்யவில்லை என சாட்சியத்தில் சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். அந்த வேலையை அவர்கள் செய்யாததன் காரணமாக அவர்கள் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த காரணத்தினால் எடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படுவது சசிகுமார் என்ற தொழிலாளிக்கு வழங்கப்பட்ட காரணம் கேட்கும் அறிவிப்பு என்றால் ஆமாம். அது **தொ.சா.ஆ.46**. தொழிலாளி சசிகுமார் வேலைக்கு வராத காரணத்தினால் மாதிரி நிலையாணை அடிப்படையில் காரணம் கேட்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டதாக மேற்படி ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் ஆமாம். அதற்கு பதில் அளிக்கப்பட்டதா என்றால் அளிக்கப்பட்டது. அந்த பதிலை தாக்கல் செய்ய இயலுமா என்றால் ஆவணங்கள் உள்ள கோப்பை பார்த்தால் தான் தெரியும். சசிகுமார் தொழிலாளி என்ற வரையறைக்குள் வரும்

காரணத்தினால் தான் அவருக்கு நிலையாணை முன்னிலைக்கு காரணம் கேட்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் தவறு. Unionist என்பதால் கொடுக்கப்பட்டது. மனுதாரர் தொழிற்சங்கம் எங்கள் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்டது என்றால் ஆமாம். **தொ.சா.ஆ.4** மனுதாரர் தொழிற்சங்கம் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கில் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை சேர்த்துக் கொள்வதற்காக கொடுக்கப்பட்ட மனு என்றால் ஆமாம். எங்கள் நிறுவனத்தில் ITI படித்தவர்களை ஆபரேட்டர் ஒர்க் மேன் என வரையறை செய்துள்ளோம் என்றால் ஆமாம். டிப்ளமோ படித்து உள்ளவர்களை ஆபரேட்டிங் இன்ஜினியர் என வரையறை செய்துள்ளோம் என்றால் ஆமாம். **தொ.சா.ஆ.30** சசிகுமார் என்ற தொழிலாளியை ஆபரேடிங் இன்ஜினியராக நியமித்துக் கொடுக்கப்பட்ட உத்தரவு என்றால் ஆமாம். **தொ.சா.ஆ.31** சசிகுமாருக்கு டீம் லீடர் அலவன்ஸ் கொடுத்ததற்கான ஆவணம் என்றால் ஆமாம். இதேபோன்று வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் டீம் லீடர் அலவன்ஸ் 2014ல் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். டீம் லீடர் அலவென்ஸ் என்பது செயல்திறன் அடிப்படையில் வழங்கப்படுகிறது என்றும்

செயல்திறன் திருப்தியாக இல்லாத பட்சத்தில் திரும்ப பெறப்படும் என சொல்லப்பட்டு உள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு உரிய Duties and Responsibilities சம்பந்தப்பட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். **தொ.சா.ஆ.31** உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு டீம் லீடராக நியமனம் செய்து வேறு உத்தரவு ஏதாவது வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் தொழிலாளர்களின் Duties and Responsibilities நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளிகள் டீம் லீடராக நிர்ணயம் செய்யப்படுவதற்கு முன்னர் என்ன வேலை செய்து வந்தார்கள் என்றால் இயந்திரங்களை இயக்கி இருப்பார்கள். டீம் லீடர் கான எந்த வேலையும் அவர்கள் இந்த நாள் வரை செய்யவில்லை என்றால் பாதி வேலையை செய்து இருக்கிறார்கள். **தொ.சா.ஆ.31** அவர்களின் Existing Role அடிப்படையில் தான் டீம் லீடர் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். Knowledge Allowance எதற்காக வழங்கப்படுகிறது என்றால் பணி செய்யும் இடத்தில் அவர்களின் திறமை அடிப்படையில் வழங்கப்படுகிறது. A.புஷ்பராஜ் என்ற தொழிலாளி என்ன

வேலை செய்து வந்தார் என்றால் அவர் தொழிலாளி தான். அவர் ஆப்பரேட்டிங் இன்ஜினியர் என்றால் ஆமாம். அவர் எங்கள் நிறுவனத்தால் பாதுகாக்கப்பட்ட தொழிலாளியாக அங்கீகரிக்கப்பட்டவர் என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளிகள் அனைவரும் டீம் லீடர் என்ற அந்தஸ்தை ஏற்க மாட்டோம் என தெரிவித்து கடிதம் கொடுத்தார்கள் என்றால் ஆமாம். நாங்கள் கொடுத்த டீம் லீடர் என்று அந்தஸ்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் அவர்கள் தொழிலாளி என்ற வரையறைக்குள் வருவார்கள் என்றால் இல்லை. புஷ்பராஜ் உள்பட OE-யாக இருந்த தொழிலாளர்கள் என்ன வேலை பார்த்தார்கள் என்றால் இயந்திரத்தை இயக்கிக் கொண்டு இருந்தார்கள் மற்றும் Process Check செய்து கொண்டிருந்தார்கள். தரத்தை உறுதி செய்து கொண்டிருந்தார்கள். புஷ்பராஜ் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளி இல்லை புஷ்பராஜ் உள்பட 30 தொழிலாளர்கள் ஆப்பரேட்டிங் இன்ஜினியர் Trainee ஆக இருந்தார்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் ஆப்பரேட்டிங் இன்ஜினியர் Trainee-ஆக இருந்தார்கள் என்றால் ஆமாம். புஷ்பராஜ் மற்றும் முப்பது தொழிலாளர்களின் பணித்தன்மை மற்றும் இந்த

வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் பணித்தன்மை இரண்டும் ஒன்றுதான் என்றால் இல்லை. புஷ்பராஜ் உள்பட 30 தொழிலாளர்கள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆப்பரேட்டிங் Workman ஆக மாற்றப்பட்டார்கள் என்றால் ஆமாம். ஆனால் அவர்களுக்கும் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கும் சம்பந்தமில்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட 32 தொழிலாளர்கள் தொழிலாளர்களா இல்லையா என்பது பொருந்து நீதிமன்ற முடிவிற்கு ஒப்புக் கொள்வதாக சொல்லி உள்ளோம் என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் டீம் லீடர் என்று அந்தஸ்து கொடுக்கப்பட்டதாக சொல்லும் போது அவர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் உள்ளதா என்றால் உள்ளது. ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் உள்ளது என காட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தில் உள்ளது அதிநவீன இயந்திரங்கள் என்றால் CNC Machine ஆகும். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட 32 தொழிலாளர்களுக்கும் மேற்படி இயந்திரத்தை இயக்குவதற்கான திறமை உள்ளது என்றால் ஆமாம். எபின் ராஜ் எங்கள் நிறுவனத்தின் ஹெட்ச் ஆர் மேனேஜர் ஆக இருந்தார். சஞ்சீவ் Mehrotra

Plant Director ஆக இருந்தார். அவர் தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியது பற்றி தெரியாது. 04.09.2015 அன்று டீம் லீடராக அந்தஸ்து வழங்கப்பட்டவர்களுக்கு 18,00/- ரூபாய் உயர்த்தி தர ஒப்பு கொண்டார்கள் என்றால் ஆமாம். Tripod Grinding யாருடைய வேலை என்றால் ஆப்ரேட்டரின் வேலை ஆகும். Line-ல் பிரச்சனை என்றால் யார் அதை பார்ப்பார்கள் என்றால் Team Leader போய் பார்ப்பார். Line-ல் உற்பத்தி சம்பந்தமான பிரச்சினை வரும்போது யார் பார்ப்பார்கள் என்றால் production சூப்பர்வைசர் பார்ப்பார். ஆப்ரேட்டர்கள் மட்டும் டீம் லீடர்களின் நேரடி மேல் அதிகாரி ப்ரொடக்ஷன் சூப்பர்வைசர் (Value Stream Leader) ஆவார். எங்களுக்கு சான்றிட்ட நிலையாணை உள்ளதா என்றால் தெரியவில்லை. தொழிலாளி தவறு செய்யும் பட்சத்தில் எந்த விதி அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் தெரியாது. சசிகுமார் மீது எந்த விதி அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் தெரியாது. தொ.சா.ஆ.46 ல் மாதிரி நிலையாணைப்படி நடவடிக்கை எடுக்கப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் பெயரளவிற்கு தான் டீம் லீடர் என்ற அந்தஸ்து

வழங்கப்பட்டார்கள் என்றாலும் அவர்கள் பணியின் அடிப்படையிலும் தகுதியின் அடிப்படையில் தொழிலாளர்கள் என்ற வரையறைக்குள் தான் வருவார்கள் என்றால் இல்லை. என்னுடைய சாட்சியத்தை Forging, மெஷினிங் அசெம்பிலி ஆகிய மூன்று பிரிவிற்கும் சேர்த்து தான் வழங்கியுள்ளேன். நான் Forging பிரிவில் வேலை பார்த்தேன் மற்ற இரண்டு பிரிவில் மேற்பார்வை பார்த்து உள்ளேன். மேற்படி பிரிவுகளில் வேலை பார்த்தேன் என காட்ட ஆதாரம் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை.

தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்பட்டது.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:07.02.2026